சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# செய்தி மடல்

வெளியீடு : 025 மாதம் : கார்த்திகை ஆண்டு : 2011

கொழும்புத் தமிழ்ச் சங்க இணையத்தளத்தில் "எம்மைப் பற்றி" என்னும் பகுதியிலுள்ள "செய்தி மடல்" என்பதன் பிரசுர வடிவம் இம்மடலாகும். மேலும் விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

இணையத்தளம்:www.colombotamilsangam.com
மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com
info@colombotamilsangam.com
தொலைபேசி இல : 2363759
தொலைநகல் : 2361381



## நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்
## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா
## 23, 24.12.2011

- நாவலர் சிலை ஊர்வலம்
- கலாநிதி தனஞ்செயராஜ அவர்கள் எழுதிய நாவலர் பணிகள் மீள்பிரசுரம் வெளியீடு
- 'சங்கத்தமிழ்' நாவலர் சிறப்பிதழ் வெளியீடு
- பேச்சுப் போட்டியில் தெரிவான நல்லபல பேச்சுக்கள்
- அறிஞர்கள், கலைஞர்கள் கலந்து கொள்ளும் சொற்பெருக்கு ஆய்வரங்கு மற்றும் கலை நிகழ்ச்சிகள்
- இவ்வாண்டில் நடைபெற்ற போட்டிக்கான பரிசில் வழங்குதலும், ஊக்குவிப்புக் கொடை வழங்குதல்.

*மு.கதிர்காமநாதன்*
தலைவர்

*ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்*
பொதுச் செயலாளர்

*செ.திருச்செல்வன்*
நிதிச்செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாதம் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றிய மீள்பார்வை

## அறிவோர்ஒன்றுகூடல் - 479

05.10.2011 இன்றைய அறிவோர்ஒன்று கூடல் நிகழ்ச்சி கல்விக்குழுச் செயலாளர் திரு.க.க.உதயகுமார் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. ஊவுளஅவைா ளவசழஉம டீசழமநளீஎவ டுவன பணிப்பாளர் திரு.கோர்டன் நடேசன் பங்கு பற்றினார். தலைவர் தமது அறிமுக உரையில் தமிழ் மக்களின் சேமிப்பு நிறுவனமாக தேசிய சேமிப்பு வங்கிதான் பெருமளவில் காணப்படுகிறது. ஆனால் கொழும்பு போன்ற நகரங்களில் பங்குச் சந்தை முன்னணி வகிக்கத் தொடங்கியுள்ளது. இன்றைய பேச்சாளர் திரு.கோர்டன் நடேசன் "பங்குச் சந்தையும் முதலீடும்" பற்றி உரையாற்றவுள்ளார். இவர் சென்ஜோசப் கல்லூரியின் பழைய மாணவர். 27 வருடங்கள் பங்குச் சந்தை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார். பிரபலயம் வாய்ந்த பங்கு வர்த்தக நிறுவனங்களுடனும் பங்குச் சந்தையாளர்களுடனும் உலகளாவிய ரீதியில் தொடர்பு கொண்டுள்ள நாட்டின் முதன்மை பங்குச் சந்தை முகவர்களில் ஒருவர் திரு.நடேசன் தமதுரையில் பங்குச் சந்தை முதலீடுகள் ஒருவகை முதலீடுதான் 30 வருடங்களாக இடம்பெறுகிறது. ஒவ்வொரு கம்பனியும் பங்குகளை விற்பனை செய்கின்றன. பொதுமக்கள் அவற்றின் தரகர் மூலம் வாங்கி விற்கலாம். இலங்கையில் 28 தரகர்கள் நிறுவனங்கள் உள்ளன. நாளுக்கு நாள் விலை மாற்றம் ஏற்படும். கூடியளவு முதலீடு செய்பவர்களுக்கு பங்கு இலாபம் (னுஎைனைநயவள) கிடைக்கும். அதனுடன் கூடிய விலைக்கு விற்கும் போது இலாப இடைவெளியும் அதிகரிக்கும். அந்த வகையில் பங்குகளை வாங்கி விட்டு அவைதொடர்பான நிலவரங்களை பத்திரிகைகள் மூலம் அல்லது வேறு ஊடக்களினூடாகவும் அறிந்து கொள்ள முடியும். எங்கும் போகாமல் வீட்டிலிருந்தே ழூடேுஐநேு மூலமாக நிலவரங்களை அறிந்து தொலைபேசித் தொடர்புகள் மூலம் வர்த்தகத்தை செய்ய முடியும். வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த தொழில் வரப்பிரசாதமாகும். கென்யா நாட்டில் தேயிலை விலை மாற்றம் ஏற்பட்டால் எமது நாட்டுத் தேயிலைக்கு கிராக்கி ஏற்படும். அப்போது தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்தால் இலாபப் பங்கு அதிகரிக்கும். அந்த வகையில் வீழ்ச்சிகளையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும் கம்பனி மூழ்கிவிடும் தருணங்கள் பங்குகள் துரிதமாக விலைப்படும். விலை நட்ட ஏற்பட்டலும் இவர் விற்றுவிடுவர். வருவது இலாபமாகவிருக்கக் கூடும் என்பதனால் நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளும் பங்கு விலைகளின் ஏற்ற இறக்கங்களைத் தீர்மானிக்கும். இலங்கைகள் வாடிக்கையாளரிடம் இருந்து முதலீடுகளை பெற்று கூடுதலாக பணம் ஈட்டுவதற்காக பங்குகளை வாங்குகின்றனர். கூடுதலான லாபத்தினை பெற்று ஒரு பங்குகளை மட்டுமே வாடிக்கையாளரிடம் வட்டியாக

## நூலகம் (சிறுவர் பகுதி)



08.10.2011 **"கதை கதையாம் காரணமாம்"** என்ற நிகழ்வில் திருமதி சுமதி பாலஸ்ரீதரன் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

## "கதாப்பிரசங்கம் - கலைப்பயிற்சி - 3

11.10.2011 **"அமாவாசையில் அம்புலி"** என்ற தலைப்பில் சிவத்திரு ஸ்ரீதயாளன் அவர்களின் நிகழ்ச்சியினை காலை 9.30 மணிக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் தொடங்கி வைத்து ஆற்றிய உரையில் காலத்திற்கு ஏற்ற செய்திகளை மக்களிடம் பகிர்ந்து கொள்வதற்கு வழிகோலும் நிகழ்ச்சி கதாப் பிரசங்கமாகும் அடுத்த மாதம் முதல் நோன்மதித் திருநாளின் போது "பேச்சுப் பயிற்சி" மாணவர்களுக்கு அளிக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை தமிழ்ச் சங்கம் ஸ்ரீதயாளன் அவர்களுடன் இணைந்து செயல்படுத்தும் என்றார். ஸ்ரீதயாளன் தமதுரையில் கலைவளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் தான் என்ற நிலை மாறி தலைநகரம் கூடுதலாக வளர்ச்சியடைந்து வருகிறது. கதாப்பிரசங்கம் சமயம் சார்ந்தது இல்லை. அது இலக்கியம் சார்ந்ததொன்றாகும். கதை சொல்லும் மரபு தமிழர்களிடையில் பலகாலமாக விளங்கி வரும் மரபு. இயல், இசை, நாடகம் தெரியாதவர் எப்பொழுதும் தமிழாசிரியராக இருக்க முடியாது. வினாசித்தம்பி போன்றோர் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற கதாப்பிரசங்க வித்தகராக விளங்கினர். இன்றைய கதாப்பிரசங்கம் "அமாவாசையில் அம்புலி" என்ற அபிராமிப்பட்டரின் கதை. இந்த கதாப்பிரசங்க நிகழ்ச்சியின் 10வது நாள் நூலொன்றினை வெளியிடத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறினார்.

ஸ்ரீதயாளன் அவர்கள் விநாயகர் வழிபாட்டுடன் தொடங்கிய கதாப்பிரசங்கத்தின் போது, ஓங்காரத்தை நீளமாக சொல்பவருக்கு எந்த நோயும் வரமாட்டாது என்றார். தேவர்கள் திருப்பாற்கடலில் கடைந்து அமிர்தத்தினை உண்டனர். சாகா மருந்து கிடைத்து விட்டது. மார்க்கண்டேயரைக் காப்பாற்ற சிவன் யமனை உதைத்துத் தள்ளினார். அபிராமிப்பட்டரை காப்பாற்ற தேவி அமாவாசையை நீக்கி பூரணையை உருவாக்கினார். அபிராமிப்பட்டர் தாய்க்குலத்தை நேசிப்பவர். அவர்மீது பிழை கண்ட மன்னன் அமாவாசையன்று பூரணையைக் காட்டுமாறு சவால்விட்டார். காட்டாவிட்டால் நெருப்பில் விழுந்து மாள வேண்டும். 20அடி குழிவெட்டி (10'X10') மேலே உறியில் இருந்து 100 கயிறுகளை முடிந்து ஒவ்வொரு கயிறாக வெட்டி கடைசிக் கயிற்றினை வெட்டும் போது. தேவி தன் னுடைய தாளமுகத்தினை வானத்தில் எறிந்து பிரகாசிக்கும் பூரணச் சந்திரனை உருவாக்கிக் காட்டினார். தாயே நீ இரங்கா விடில் சேய் நான் உயிர் வாழுமோ என்ற பாடலைத் தான் அபிராமிப் பட்டர் பாடினார். இப்படியான கதைகள் மூலம் இளைய சமுதாயம் படிப்பினை பெறும். அதற்கு நாங்கள் வழி காட்ட வேண்டும் என்றார். ஸ்ரீதயாளன் அவர்கள். நிகழ்ச்சி பக்க வாத்தியத்துடன் நடைபெற்றது. துணைச் செயலாளர் தம்பு சிவா அவர்கள் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் 12 மணிக்கு நிறைவு பெற்றது.

## அற்றைத் திங்கள்

11.10.2011 ஒக்டோபர் மாத நோன்மதி நாள் அற்றைத்திங்கள் நிகழ்ச்சியில் முஸ்லிம் கலாச்சார அமைச்சின் முன்னை நாள் மேலதிக செயலாளர் S.H.M.ஜெமில் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். துணைத் தலைவர் திரு.ஆ.குகமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கி, தமதுரையில் திரு.ஜெமீல் அவர்கள் கல்முனை சாஹிரா கல்லூரி, மற்றும் அட்டாளைச் சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் அதிபராக முன்பு பணியாற்றியவர். 21 புத்தகங்களையும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டவர். நாட்டார் பாடல்களில் ஆய்வு நடத்தியவர் என்றார்.

தமிழ்ச் சங்கத்திற்கு நன்றி கூறி தமதுரையினை தொடங்கிய ஜனாப் S.H.M.ஜெமில் அவர்கள் 1990 தொடக்கம் தமிழ்ச்சங்கத்தில் தொடர்பு உண்டு என்று கூறி தாம் சங்கத்தின் துணைக்காப்பாளராக மூன்று வருடங்கள் பணி புரிந்தமையையும் நினைவு கூர்ந்தார். 1999 தமிழகத்தில் இடம்பெற்ற "இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டில் பங்கு பற்றியதற்காக தமக்கு தமிழ் மாமணி" என்ற பட்டத்தினை தமிழ்ச்சங்கம் வழங்கியதை நினைவு கூர்ந்தார். கவிபாடும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமது வாழ்வில் தமக்கு கல்வி போதித்த ஆசான்கள், தமது நல்மணாக்கர்கள் பற்றியும், தாம் வாழ்வில் கலந்து உரையாடிய தமிழ் அறிஞர்கள் பற்றியும் திரு.ஜெமீல் அவர்கள் நினைவு கூர்ந்தார். பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் சதாசிவம், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, பேராசிரியர் உவைஸ் ஜனாப் A.M.A.அசீஸ் திரு.கமால்தீன் ஆகியோர் இவர் நினைவுபடுத்திய பெருமக்களில் சிலர். தமது கல்லூரி வாழ்க்கையில் ராமகிருஷ்ண வித்தியாலயம், கல்முனை காமல் பாத்திமா கல்லூரி போன்றவற்றில் தாம் பெற்ற அனுபவங்கள் பற்றியும் இன, மத வேறுபாடு இன்றி சகல சமயங்களினதும் உண்மைகளை தாம் விரும்பிக் கற்றதாக கூறினார். "பாகும் தெளிதேனும், பாலும் பகுப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்" என்ற தேவாரப் பாடலை அப்படியே பாடிக் காட்டினார். கிறிஸ்தவ மிஷனரிமாரிடம் தாம். கற்ற நேரம் தவறாமை, ஒழுக்கம் என்பவற்றைப் பற்றிக் கூறினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாம் கல்வி கற்ற போது இடம் பெற்ற சுவாரசியமான சம்பவங்கள் பற்றிக் கூறினார். மாணவர்களிடையே விவாதப் போட்டிகளை கொழும்பு Zahira கல்லூரியில் ஆரம்பித்து. பின்பு மற்றைய கல்லூரிகளுக்கும் பரவச் செய்தமை. வானொலி நிகழ்ச்சிகளின் போது தாம் சந்தித்த கலைஞர்கள் பற்றியும் திரு.ஜெமீல் அவர்கள் நினைவு கூர்ந்தார். அந்த நாட்களில் கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவ மாணவிகள் கவிதை மூலமே கேள்வி பதில் சொல்வார்கள். ஆசிரிய - மாணவர் நல்லுறவு நன்கு வியாபித்திருந்தது என்றார். கலாசார விழுமியங்களில் தமிழ்,



இஸ்லாமிய மக்கள் கொண்டிருந்த பற்றுறுதியினை விளக்கிக் கூறினார். இவரது "அறிவாக்கங்கள் என்ற நூலில் இருந்து சில தகவல்கள். இவர் சவூதி அரேபியாவில் ரியாத் சர்வதேச பாடசாலை அதிபராக கடமை புரிந்தவர் (2001-04). இலக்கியம் வரலாறு, கல்வி, நாட்டுப்புறப் பணபாட்டியல் துறைகளில் ஆய்வு செய்தர். இலங்கையின் அத்தனை தமிழ் சிங்களப் பத்திரிகை, சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். குறிப்பிடத்தக்க 16 கௌரவங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளர். 25 அமைப்புகளில் தகுதி வாய்ந்த பதவிகளை வகித்தவர். 22 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டவர். (கருத்தரங்கு, சுற்றுலாக்கள்). இத்தகைய ஒரு பெருமகனுக்கு எமது துணைத்தலைவர் சங்கத்தமிழ் நூல் ஒன்றினை அன்பளிப்புச் செய்தார். திரு.ஜெமீல் அவர்கள் பல புத்தகங்களை எமது நூலகத்திற்கு அன்பளிப்பு செய்து சிறப்பித்தார்.

## அறிவோர்ஒன்றுகூடல் - 678

12.10.2011 இன்றைய அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்கு சங்கத்தின் துணைத் தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா அவர்கள் தலைமை தாங்கினார். காணிப் பதிவாளர் திணைக்களத்தின் மேலதிகப் பதிவாளர் நாயகம் திரு.சதாசிவ ஐயர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். பெருந்தொகையான பார்வையாளர் மத்தியில் எமது பேச்சாளர் **"காணிகளின் பதிவுகளும் அவை தொடர்பான விடயங்களும்"** பற்றி உரை நிகழ்த்தினார். உரித்துச் சான்றிதழ் வழங்கும் போது தற்பொழுதுள்ள நடைமுறை பேணப்படுகின்றன. புதிதாக எந்த நடவடிக்கைகளும் இல்லை. காணிப்பதிவுகள் என்னும்போது மூன்று இடங்களில் பதிவுப் பிரதிகள் காணப்படும். காணிப்பதிவாளர் நாயகத்தின் அலுவலகம். பிரசித்த நொத்தாரிஸ் மற்றும் காணி உரித்தாளர் போன்றவர்களிடமிருந்தாகும் நில அளவையாளர் உதவியுடன் பிரசித்த நொத்தாரிஸ் அத்தாட்சிப்படுத்துவார். அவர்தான் தகுதி வாய்ந்த ஒருவராக இருக்கிறார்.

தற்பொழுது வடக்கில் நடைமுறைப்படுத்தும் காணிப்பதிவு முறை பயனுள்ள தொன்றாகும். எமது காணி உரித்துக்களை நாம் அடையாளப்படுத்த முடியும். அதைச் செய்ய விருப்பமில்லாவிட்டால் கட்டாயம் கிடையாது. காலவரையறை கூட மாற்றத்திற்கு உரியதுதான். பிரதேச அலுவலர் கிராமசேவையாளர்களுடாக மக்களுக்கு படிவங்களை வழங்கி அதில் விபரங்களைப் பெறுவதுடன் காணியின் நில அளவைப்படத்தின் பிரதி ஒன்றினையும் இணைத்துக் கொள்வர். தனியார் காணி உரித்துக்களின் பிரச்சினைகள் குறைவு. ஆனால் அரச காணிகளில் உரித்து பற்றிய பிரச்சினை உண்டு. பயிர்ச் செய்கைக்கு என அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணித்துண்டுகள், பயிர்செய்கை இடம் பெறாதவிடத்து. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு உட்படும். 1940இற்கு முற்பட்ட பதிவுகள் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இல்லை. அதற்குப் பின்னரான பதிவு செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை விபரங்களும் உண்டு. தொடர்மாடிக் குடியிருப்பாளர் தங்கள் தொடர் மாடிகளை நிறுவியவர்கள் அவற்றின் உரிய முறைப்படி பதிவு செய்துள்ளனரா என்பதை அறிந்திருக்க வேண்டும். (Decleration) Contomonion Act. கீழ் ஒவ்வொரு Appartment வீட்டிற்கும் ஒவ்வொரு பக்கம் ஒதுக்கப்படும் (பதிவுப் புத்தகத்தில்) அதை தெளிவுபடுத்திய பின்பு தான் வீடுகளை கொள்வனவு செய்தல் வேண்டும். பின்பு விற்றல் கைமாறல்களுக்கு இது உதவும். சிலர் பதிவுகளை செய்வதில்லை. (முத்திரை வரியினைத் விர்ப்பதற்காக) 1998இல் Title Registration Act என்பது தான் புதிய நடைமுறையாகும். முன்னைய ஆவணம் Registration of documents ஆகும். பெற்றோரின் பெயரில் உள்ள காணிகள், இறந்தவர்களின் காணிகள் பற்றியும் பிரசித்த நொத்தாரிஸ் மூலம் தீர்வு காண முடியும். தகுந்த ஆவணங்களை சமர்ப்பித்து செய்யலாம். சபையினர் கேள்விகளுக்கு பேச்சாளர் விடையளித்தார்.

## நூலகம் (சிறுவர் பகுதி)

15.10.2011 **"கதை கதையாம் காரணமாம்"** என்ற நிகழ்வில் செல்வி இந்துஜா இரட்ணானந்தன் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

## அறிவோர்ஒன்றுகூடல் - 679

19.10.2011 தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் தலைமையில் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் செல்வி இ.சிந்துஜா (ஆசிரியர் மத்துகம தமிழ் மகா வித்தியாசாலை) உரையாற்றினார். தலைவர் தமது அறிமுகவுரையில் வாசிப்பு மாதத்தினை ஒட்டி. நாடெங்கும் இடம்பெறும் நிகழ்ச்சிகளுக்கு மத்தியில் எமது சங்கமும் சேர்ந்து கொண்டுள்ள நிலையில் திருக்குறள் மகாநாட்டின் போது எமக்கு அறிமுகமான இளம் பட்டதாரி ஆசிரியை சிந்துஜா முதலில் மத்துகமவில் நியமனம் பெற்ற போது மாற்றத்தினை எதிர்பார்த்தார். ஆனால் சில நாட்களின் பின்பு அங்கே போய் அந்தப் பகுதி சிறார்களின் கல்வியை மேம்படச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தலைநகரில் இருந்து 40 மைல் பிரயாணம் செய்து கற்பிக்கின்றார். அத்தகைய கடமைப் பொறுப்புள்ள ஆசிரியை எமக்கு **"ஓய்வுநேரம்"** என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார் என்றார்.

செல்வி சிந்துஜா தமதுரையில் "ஓய்வுநேரம்" என்பது பல வழிகளில் எம்மவரால் செலவழிக்கப்படுகிறது. தொலைக்காட்சி, வானொலி, உரையாடல், வாசிப்பு என்பவை அவற்றில் சில. ஒரு அலுவலகத்தில் கடமையாற்றி வயது சென்ற பின்பு ஓய்வு பெறுதல் ஒரு வகை. நாளாந்த வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் ஓய்வு நேரம் வேறுவகை. பொதுவாக தன்மை பயக்கும் வகையில் இரண்டையும் நாம் அனுக வேண்டும். செய்யும் தொழிலில் பற்று இருந்தால் சோர்வு இருக்காது. மனம் தளராது முழு அர்ப்பணிப்புடன் செய்யும் வேலை ஈற்றில் வெற்றியினை பெற்றுத்தரும். இரயில் பயணம் செய்யும்போது தரிப்பு நிலையத்தில் நிற்கின்றது. அது 10 நிமிடம் ஓய்வு பெறும். அந்த நேரத்தில் இயந்திரமாக இயங்கும் பணியாளர்களை நாம் பார்க்கிறோம். புகைவண்டி புறப்பட்ட பின்பு அவர்களுக்கு ஓய்வுநேரம். அந்த வகையில் தான் மனித வாழ்விலும் ஓய்வுநேரம் உண்டு. அதை சரியாக பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நேர முகாமைத்துவம் எமது நாட்டில் குறைவு. அதை நிவர்த்தி செய்து விட்டால் நாடு அபிவிருத்தி பெறும். ஓய்வு என்றும் உடலுக்குத் தேவையான ஒன்று. நெப்போலியன் யுத்தம் செய்துகளைத்த பின்பு குதிரையில் இருந்தவாறே நித்திரை செய்வான், கொஞ்ச நேரம் மட்டும் ஓய்வு நேரம் மனதுக்குப் பிடித்ததாக இருக்கும் போது அதற்கேற்பவே அதனைக் கழித்தல்வேண்டும். தியானம், யோகாசனம், வழிபாடுகள், சமூகசேவை என்பவை ஓய்வு நேரங்களில் மேற்கொள்ளக் கூடிய பயன்தரு வழிகளாகும் என்று கூறினார். தமிழ்ச் சங்கத்தில் பேச்சாளரின் கன்னிப்பேச்சு சிறப்பாக அமைந்தது,

## கண்காட்சியும் நூல்விற்பனையும்

21, 22.10.2011 கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த ஆண்டைப் போலவே ஈழத்து நூல்கள் கண்காட்சியும் விற்பனையும் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ஐப்பசி மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 22ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களும் காலை 9.00 - மாலை 7.00 மணி வரை நடைபெற்றது. தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் தலைமையில் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. புத்தக கண்காட்சிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஈழத்துப் புத்தக விற்பனை நிலையத்தில் உள்ள ஈழத்து நூல்களும், பிரபல புத்தக விற்பனை நிலையங்களான பூபாலசிங்கம் புத்தகசாலை, காயத்திரி புத்தகசாலை, லங்கா புத்தகசாலை, தேசிய கலை இலக்கிய பேரவை, எழுத்தாளர் ஒன்றியம், மல்லிகைப் பந்தல் போன்றவர்களும் கலந்து கொண்டனர். ஈழத்து எழுத்தாளர் புத்தகங்கள் கண்காட்சிக்கும், விற்பனையும் நடைபெற்றது.

## நூலகம் (சிறுவர் பகுதி)

22.10.2011 **"கதை கதையாம் காரணமாம்"** என்ற நிகழ்வில் திருமதி ரஜனி சந்திரலிங்கம் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.




## தீபத் திருநாள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




26.10.2011 எமது தமிழ்ச்சங்கம் நடாத்தும் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சி துணைத் தலைவர் செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில் 5.30 மணிக்கு தொடங்கியது. இலக்கியக் குழுச் செயலாளர் திரு.ஞானசேகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் தமதுரையில் நாகாசுரனின் வதம் மகிழ்ச்சியுடன் தீபமேற்றி வழிபடும் நாள் இந்துக்கள் மட்டுமல்ல தமிழர்களினதும் பெருநாள். இந்தியா, சயாம் கம்போடியா நாடுகளிலும் கொண்டாடுகிறார்கள். புத்தமத்தினரும். சீக்கியரும் கூட கொண்டாடுகிறார்கள். சிங்கப்பூரில் முத்திரையும் வெளியிடப்பட்டது. தீமைகள் அகற்றி அறியாமை நீங்கி நன்மை பெற சகலரையும் வாழ்த்தினார் தலைவர். முதல் நிகழ்வாக திரு. விநாயகமூர்த்தியின் நெறியாள்கையில் வெள்ளவத்தை ராமகிருஷ்ணா வித்தியாலய மாணவர்கள் நடித்த (10ஆம் வகுப்பு) "செய் நன்றி கொன்றார்க்கு உய்வுண்டோ?" என்ற சமூக சீர்திருத்த நாடகம் சிறப்பாக இடம்பெற்றது. அதன் பின்பு பம்பலப்பிட்டி இந்து மாணவர்கள் வழங்கும் "இசைவிருந்தும்" இசை விருந்தினை திருமதி ஜெகதாம்பிகை கிருபானந்தமூர்த்தி நெறிப்படுத்தினார். 11 மாணவர்கள் அளித்த இனிமையான விருந்து அது. இறுதியாக கவிஞர் சடாகோபனின் தலைமையில் மேலும் 5 கவிஞர்கள் முறையே கவிஞர் அன்பு வதனி, கவிஞர் ஜோனி மதுரநாயகம், கவிஞர் ஷைலஜா ஸ்ரீ, கவிஞர் மர்ஹூம் மௌலானா, கவிஞர் ஆதித்தன் ஆகியோர் வழங்கிய "தீயவர் தீச்செயல் தீய்த்திடும் தீயென பரவட்டும் தீபாவளி" என்ற தலைப்பில் கவியரங்கு இடம்பெற்றது. உணர்ச்சியூட்டும் கவிமொழிகளினால் பார்வையாளர்களை நிறுத்தி வைத்திருந்தனர் எம் இளம் கவிஞர்கள் என்றால் மிகையாகாது.



நிறைந்த பார்வையாளர் கலந்து சிறப்பித்தனர். தமது நன்றியுரையில் துணைச் செயலாளர் திரு தம்பு சிவா அவர்கள் பங்கு பற்றிய கலைஞர்களுக்கும், சபையினருக்கும் ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்ச் சங்க நிர்வாகிகளுக்கும் நன்றி கூறினார். இயல், இசை, நாடகங்களில் இளம் சிறார்கள் மெருகு பெற்று







வருவதனைச் சுட்டிக் காட்டினார்.

## இலக்கியகளம் - 72

26.10.2011 இலக்கியக்களம் நிகழ்விற்கு சங்கத் துணைத் தலைவர் திரு.ஆ.குகமூர்த்தி தலைமை தாங்கினார். தலைவர் தமது அறிமுக உரையில் இளைய பேச்சாளர் திரு.தெ.ஞா.மீநிலங்கோ "பேசும் தனிமையின் முகவரி" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளதாக கூறி அவரை அறிமுகப் படுத்தும் போது அவர் ஒரு முதுமாணிப் பட்டதாரி. இலக்கியம், கவிதை, மொழியியல், அரசியல் ஆய்வுகளில் ஈடுபட்டதுடன் ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயங்களை பிறமொழிகளிலிருந்து மொழி பெயர்த்து வழங்குவதில் ஆர்வமுள்ளவர். 6 நூல்களைப் பதிப்புச் செய்தவர் என்றார். திரு.மீநிலங்கோ தமதுரையின் போது பூச்சியின் அபிப்பிராயத்தைப் பற்றி சிறந்தி அக்கறை காட்டுவதில்லை. பூச்சி தன்னைக் காப்பாற்றுவதற்கு உபாயங்களை கடைப்பிடிக்கும் என்ற தத்துவத்தினைக் கூறி மனிதன் தனிமை வயப்பட்டவன் தனிமை என்ற மொழி பேசி கற்பனையில் வாழும் மனிதன் படைப்புகளையும் உருவாக்குகின்றான். முகவரி தேடும் படைப்புக்களில் இந்தோனேசியாவின் கம்யூனிஸ கருத்துக்களைக் கொண்ட வாய்மொழி கருத்துக்களை நூலாக வெளியிட்டபோது 25 வருட தடை விதிக்கப்பட்டது. பிரமூத் என்ற ஆக்கம் 33 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. ஆதிக்க நாடுகளுக்கு சாதகமில்லாத படைப்புகளுக்கு என்றுமே நோபல் பரிசு வழங்கப்பட்டதில்லை. வாழ்க்கையை அரசியலில் இருந்து வேறுபடுத்த முடியாது. அரசியலை வாழ்க்கையில் இருந்து வேறுபடுத்த முடியாது. மின்சி என்ற யாவா இன சிறுவன் மற்றவர்களால் ஒதுக்கப்பட்டான். அவனது கதை யதார்த்தமானது. தமிழ் இனத்தவரும் கூட கிளிண்டன், டெல்வி என்பவற்றின் அபிப்பிராயம் பற்றியே கவலை கொள்கின்றனர். கிருஷ்ணப்பிரியனின் கவிதைப் போர் மலையாள் உலகை பெரிதும் பாதித்திருந்தது. அந்த வகையில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். காரணங்கள் ஆராயப்படாமல் தூங்கிக் கிடக்கின்றோம் (குழந்தையின் உள்ளம்) பயங்கரவாதத்தை அழித்த போது இன்னொரு பயங்கரவாதத்திற்கு வித்திட்டுள்ளனர். கஸ்தூரிபாயின் வாழ்க்கையில் காந்திய தத்துவங்கள் முரண்படுகின்றன. பெண்விடுதலை பற்றி காந்தி கொண்டிருந்த கருத்துக்களுக்கு இசைவில்லை. புதுவைரத்தினதுரையின் வரிகளைக் கூறி நிறைவு செய்தார்.

(1) மகாத்மாவின் மனைவி எழுப்பும் கேள்விகள் (மைதிலி சிவராமன்) (2)

"சாவிற் தமிழ் படித்துச் சாகவேண்டும்
என் சாம்பல் தமிழ் மணத்து வேகவேண்டும்"

- ஈழத்துக் கவிஞர் சச்சிதானந்தன் -

சமுதாயம் தீயவர்களின் செயலால் பாதிப்படைந்ததைவிட நல்லவர்களின் ஈடுபாடின்மையாலேயே அதிகம் சீர்குலைந்துள்ளது.

- ஓர் அறிஞர் -



## 'தமிழின்பம்'

'கண்ணன் ஊதுங் குழலிதுங்
கனியில் ஊறுஞ் சுவையிதும்
பண்ணில் ஊறும் பயனிதும்
பாடுங்குயிலின் குரலிதும்
உண்ணும் தேவர் அமிழ்திதும்
ஊரும் தென்றல் வளியிதும்
நண்ணும் இனிமைப் பண்பெல்லாம்
நல்ல தமிழின் இன்பமே!'

- வித்துவான் வேந்தனார் -

'செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி கலம்மொழி மாதா - படும்
அல்லைத் தீர்க்க அறிவுவ ராதா'

- தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் -


## நன்றியுடையோம்

சமூகந்தர முடியாத நாட்களில் சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகளைச் சேகரித்து தொகுப்புப் பணிக்கு உதவிய பொதுச் செயலாளர் திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

தொகுப்பாளர்:- கதிரவேலு மகாதேவா
ஆட்சிக்குழு உறுப்பினர்

வடிவமைப்பு:-
திருமதி. கு. சத்தியஜோதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

## 'சங்கத்தமிழ்'

நலம் விரும்பிகளே! 'சங்கத்தமிழ்' சந்த தாரராய்ச் சேர்ந்து விட்டீர்களா? இல்லையேல் இப்பொழுதே தங்கள் பெயர்களைப் பதிவு செய்து சங்கத்தமிழைப் பெற்றுக் கொண்டு எமது தமிழ்ப்பணிக்கு உதவுங்கள்.

**'சங்கத்தமிழ்' ~ சஞ்சிகையின்**
**சந்தா விபரம்**

இலங்கை : தனிப்பிரதி ரூபா 100/=
ஒரு வருடம் ரூபா 600/= (தபால் கட்டணம் உட்பட)
இந்தியா : ஒரு வருடம் இந்தியா ரூபா 450/=
ஏனைய நாடுகள் : ஒரு வருடம் 20 அமெரிக்க டொலர்

சந்தாக்காரர்கள் தங்கள் சந்தாவை
*Colombo Tamil Sangam Society Ltd.*
கணக்கு இல : 1100014906
*Commercial Bank* வெள்ளவத்தை என்ற கணக்கில்
செலுத்தும் வண்ணம் வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org